**சீதாவக பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**
-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்
------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
---------------------------------------------------------------

2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 22 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 27 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
-----------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கத்தைத் தவிர சீதாவக பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
-----------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

(அ) இருநூற்றைம்பது கொம்போஸ்ட் பைகளது பெறுமதியான ரூபா 900,000 கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மூலதனச் செலவினக் கணக்கில் ரூபா 18,552,063 பெறுமதியான நிலையான சொத்துக்கள் ரூபா 18,942,763 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மூலதனச் செலவினம் ரூபா 390,700 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின்போது நீதிமன்றத் தண்டப்பணத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகையில் ரூபா 10,647,063 கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, நிதிக்கூற்றுக்களில் 2014 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 16,000,000 ஏற்படும் விதத்தில் சீராக்கல் செய்யப்பட்டமையால் நீதிமன்றத் தண்டப் பணக் கணக்கு ரூபா 5,352,937 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பெறுமதி சேர் வரி நிலுவையாகிய ரூபா 63,123 கணக்கிலிருந்து நீக்கப்படும்போது திரண்ட நிதியத்தில் சீராக்கல் செய்யப்பட்டதால் அக் கணக்கில் ரூபா 63,123 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஹங்வெல உப அலுவலகத்தில் கலீபவுசர் மூலம் 2016 ஆம் ஆண்டின்போது சம்பாதித்த ரூபா 986,296 ஆண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை.

(ஊ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 120,868 வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதால் கொடுப்பனவு செய்ய வேண்டிய வரிக் கணக்கு ரூபா 120,868 குறைவாகவும் பொது வைப்புக் கணக்கு அதேயளவு அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(எ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 64,546 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பொது களஞ்சியக் கணக்கு மீதி ரூபா 490,819 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2009 முதல் 2011 வரை சபை சேகரித்த வரியாகிய ரூபா 185,251 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்படவில்லை.

(ஒ) 2016 டிசெம்பர் மாதத்தின் பொருட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரியாகிய ரூபா 565,545 நானாவித வைப்புக் கணக்கில் ரூபா 4,015,003 ஆகச் செலவு வைக்கப்பட்டமையால் நானாவித வைப்புக் கணக்கு ரூபா 3,449,458 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 02 கணக்கீட்டு விடயங்களது மீதிக்கும் அவற்றிற்குரிய உப பதிவேட்டின்படியான மீதிகளுக்குமிடையே ரூபா 7,849,089 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 6,113,839 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,247,988 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 33,896,818 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவறான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| வருவாயக்கான விடயம் | 2016 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | பட்டியலிடப்பட்ட தொகை | உள்ளவாறு அறவிடப்பட்டது | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட தொகை | உள்ளவாறு அறவிடப்பட்டது | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| தீர்வையும் வரியும் | 5,891,802 | 19,130,653 | 17,099,198 | 7,923,257 | 6,533,272 | 10,239,591 | 10,881,061 | 5,891,802 |
| அனுமதிப் பத்திரக்கட்டணம் | - | 1,663,045 | 1,663,045 | - | - | 1,483,777 | 14,833,777 | - |
| விற்பனைநிலைய வாடகை | 955,464 | 4,135,012 | 4,649,656 | 440,820 | 548,632 | 4,496,449 | 4,089,617 | 955,464 |
| கைத்தொழில் மற்றும் வியாபார வரி | - | 2,629,070 | 2,629,070 | - | - | 2,212,330 | 2,212,330 | - |
| இறைச்சிக் கடை | 311,817 | 6,261,468 | 6,262,710 | 310,575 | 319,375 | 8,559,850 | 8,867,407 | 311,817 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான தீர்வை வரி மீதி ரூபா 7,923,257 ஆகும். இதில் ரூபா 1,931,825 முன்னைய ஆண்டுகளுக்குரிய தீர்வை வரி நிலுவையாகும்.

### 2.2.3 விற்பனைக் கூட வாடகை

ஹங்வெலயில் மூடப்பட்டவாறுள்ள விற்பனைக் கூடத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 50,297 நிலுவையானது அறவிடப்படுவது நிச்சயமற்றதாகியிருந்தது.

### 2.2.4 இறைச்சிக் கடை வாடகை

2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குமான வாடகை நிலுவையில் நடப்பாண்டின்போது அறவிடப்பட்டிருந்தது ரூபா 126,379 ஆகும். அது மொத்த வாடகை நிலுவையின் 41 சதவீதமாகும். முன்னைய ஆண்டுகளுக்கான வாடகை நிலுவையில் 59 சதவீதமான ரூபா 185,438 அறவிடப்படுவதில் சபை போதியளவு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்களை அவதானிக்கப்படுகின்றன.

(அ) பாதுக்கை வாரச் சந்தையை நகர அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரித்தல்.

பாதுக்கை வாரச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கென 2014 மே 24 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரித்திருந்தபோதும் அதனைச் சபையிடம் திருப்பி ஒப்படைக்காது வருவாயைச் சேகரித்தவாறிருந்தது. எனினும், வாரச் சந்தையைச் சுத்திகரிப்பதற்கு நடப்பாண்டில் சபை செலவழித்த தொகை ரூபா 3,354,452 ஆகும். அதனை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மீளளிப்பாகப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சொத்துத் தடை விதிக்கும் உத்தியோகத்தர்களுக்குத் தரகுப் பணம் வழங்குதல்

2016 மார்ச் 24 ஆந் திகதி நடைபெற்ற நிர்வாக வியூகமைப்பு மற்றும் கேள்விகளுக்கான குழுவினது அறிக்கையின் 4 ஆம் தீர்மானப்படி சொத்துத் தடை விதிக்கும் உத்தியோகத்தர்கள் சேகரிக்கும் பணம் நாளாந்தம் அலுவலகத்தில் வைப்பிலிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், அது தாமதமாகுமிடத்து தரகுப் பணம் வழங்கப்படலாகாது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 2016 ஆண்டின் முதல் 05 மாதங்களுக்கும் ரூபா 14,429 வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயபன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது நிதியேற்பாட்டின் மூலம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 13,710,140 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுதுவெல்ல மயானம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் திறந்து வைக்கப்படாதிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 31 வேலைகள் முடிவுறாதிருந்ததுடன், அதன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 23,619,453 ஆகவுமிருந்தது.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2016 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ஊழியர்களுக்கும் வாகனப் பராமரிப்புக்குமென ரூபா 3,374,830 செலவிடப்பட்டிருந்தது. கொம்போஸ்ட் விற்பனை மற்றும் படிப்படியாக அழிவடையும் கழிவுப் பொருட்களது விற்பனையால் பெற்ற வருவாய் ரூபா.595,984 ஆகும்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினம் என்வற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது ஆக்கபூர்மான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுபாடுகளும்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) உள்ளகக் கணக்காய்வு